1990 மார்ச் 19]

பேச்சிப்பாறையில் சிறிய நீர்மின் திட்டம் அமைத்தல்

*353—திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் சிறிய நீர் மின் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் சிறிய நீர் மின் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

வைகை நதியின் குறுக்கே கால்வாய் திட்டம்

*741—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

உசிலம்பட்டி தாலுக்காவில், வைகை நதியின் குறுக்கே விருவேட்டிலிருந்து உத்தப்பநாயக்கனூர் வழியாக வரும் கால்வாய் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பி. என். வல்லரசு: பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டித் தொகுதியில் 58 கிராமங்கள் உள்ளிட்ட சில பகுதிகளுக்கு 6 ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி வந்தும், இந்த ஆண்டு 900 ஏக்கர்களுக்கு மட்டுமே நீர்ப்பாசன வசதி அளித்து, பெரியார் வைகை நீர்ப்பாசனப் பொறியாளர்கள் அரசுக்குத் திட்டம் தயாரித்து அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. இதனால் எனது தொகுதி மக்கள் மிகவும் வேதனையில் உள்ளனர். எனவே, அடிப்படை கோரிக்கையான 6 ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினருக்குத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது. பெரியகால்வாயிலிருந்து, 21 கிலோ மீட்டர் நீள கால்வாய் அமைக்கும் பணிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வல்லரசு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அரசு 6 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்புக்கு நீர்ப்பாசன வசதிஅளிக்க திட்டம் ஒன்றைத் தயாரித்து கொண்டிருக்கிறது. அவற்றுக்குப் பின் பிக்அப் அணைக்கட்டி லிருந்து தண்ணீர் எடுத்து வருவதற்கு முடியுமா என்பதைப் பொறியாளர்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறார்கள். அறிக்கையை